


பெரு நாட்டிலுள்ள லீமா நகரில் 1586 ஆம் ஆண்டில் பிறந்தாள். இவளது ஞானஸ்நானப் பெயர் இசபெல்லா. இவளது முகம் ரோஜா மலரை ஒத்திருந்தாள் பின்னர் இவளுக்கு ரோஸ் என பெயர் வழங்கலாயிற்று. இவள் குழந்தையாய் தொட்டிலில் கிடக்கும் பொழுது ஓர் அழகிய ரோஜா மலர் தொட்டிலில் விழுவதை தாய் கண்டபடியால் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டது என்றும் சொல்லுவார்கள். பாவிகள் மனந்திரும்பும்படியாக இவள் அடிக்கடி செபிப்பாள். உழைப்பாள். அழுவாள். தன் தந்தையின் தோட்டத்தில் ஒரு சிறு குடிசை அமைத்து அங்கு போய் செபிப்பாள். ஆண்டவர் பட்ட பாடுகளைப் பற்றி அடிக்கடி சிந்திப்பாள். உள்ளத்தின் வேதனைகளையும் உடலின் நோவுகளையும் சகிப்பது இவளுக்கு எளிதாயிற்று. “இனிய இயேசுவே, உமது திருச்சித்தத்தின் படியே எனது வேதனைகளையும் அதே நேரத்தில் உம்மீது எனக்குள்ள அன்பையும் அதிகரியும்” என்பாள். வேதனைகளை பொறுமையோடு சகிப்பாள். தானே தவ முயற்சிகளைத் தேர்ந்தெடுத்து செய்து வருவாள். இளம் வயதிலேயே தன் கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்தாள். புனித சியன்னா கத்தரீனம்மாளை மேல் வரிச்சட்டமாக வைத்து தவ வாழ்வு நடத்தினாள். தையல் வேலை இவளுக்கு நன்றாகத் தெரியும். குடும்பத்தில் பணமுடை ஏற்பட்ட போது இவள் தையல் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றினாள். பலர் இவளை மணக்க விரும்பியதால் இவள் தன் தலைமயிரை வெட்டி 11 ஆண்டுகளாக தவ வாழ்வு நடத்தினாள். இவளது படத்தை உற்று நோக்குவோமானால் ஒரு குடிசையின் வாசலில் இவள் முழந்தாளிட்டு செபிப்பதைப் பார்க்கலாம். ரோஜா மலர்கள் அங்கு இருக்கின்றன. அவளோடு சேர்ந்து பாடி வந்த பறவைகளில் ஒன்று அங்கு இருக்கிறது.

கற்புக்கும் விசுவாசத்திற்கும் மாறான சோதனைகளை அவள் வீரத்துடன் எதிர்த்து போராடுவாள். பின் அவள் மனதில் ஒப்பற்ற அமைதியும், ஆனந்தமும் ஏற்படும். பாவிகளின் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு ஆதரவாகவும் தனது தவ முயற்சிகள் அனைத்தையும் ஒப்புக் கொடுப்பாள்.

**சிந்தனை: “நம் ஆண்டவரின் கரங்களில் ஒரு பெரிய தராசைக் கண்டேன். அவர் மக்களுக்கு வர அனுமதித்த துன்ப துயரங்களுக்கு ஏற்ப வரங்களை கவனத்துடன் பகிர்ந்து கொடுத்தார். கடவுளுடைய தராசில், துன்பத்தின் அளவு வரப்பிரசாதம் கிடைக்கின்றது என்பதை நாம் அறிய வேண்டும். நமது சிலுவைகள் யாருடைய தராசில் நிறுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவோமானால் நமக்கு வரும் சிலுவைகளைப் பற்றி நாம் ஒரு பொழுதுமே முறையிட மாட்டோம். (புனித லீமா ரோஸ்)**

**செபம்: ஆண்டவரே, நாங்கள் எங்கள் துன்ப துயரங்களைப் பற்றி முறையிடாது இருக்க வரம் தாரும்.**